கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட / முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (யூன்/யூலை 2017)

CH 3122 - The Place of the Church and the Sacraments in Christian Life

நேரம் : 2 மணித்தியாலங்கள்

இவ்வினாப்பத்திரம் பகுதி I, பகுதி II என இரு பகுதிகளைக் கொண்டது.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தலா இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

தவறான விடைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி - I

1. I. திருமுழுக்கில் "அழியா முத்திரை" என்கின்ற இறையியல் பதம் விளக்கும் கருத்து யாது? (10 புள்ளிகள்)
   II. சீர்திருத்தவாதிகளின் திருமுழுக்கு இறையியல் யாது? (10 புள்ளிகள்)

2. I. இயேசுகிறிஸ்து தந்தையின் "முழுமுதல் அருள் அடையாளம்" என்பதால் புரிந்து கொள்ளப்படுவது யாது? (10 புள்ளிகள்)
   II. திருச்சபை "அடிப்படை அருள் அடையாளம்" என்பதால் நீர் புரிந்து கொள்வது யாது? (10 புள்ளிகள்)

3. I. யூத மறையில் "பாவப்பரிகார பலி" என்றால் என்ன? (10 புள்ளிகள்)
   II. லூத்தர், சுவிங்கிலி, கால்வின் ஆகியோரின் நற்கருணை இறையியல் யாது? (10 புள்ளிகள்)

பகுதி – II

4. தொடக்ககால தலத்திருச்சபையின் பண்புகள் யாவையென கோடிட்டுக்காட்டி அத்தகைய பண்புகள் இன்றைய திருச்சபைகளுக்கு முன்னுதாரணமாக இருக்க முடியும் என்பதை ஆராய்க. (30 புள்ளிகள்)

5. 2ஆம் வத்திக்கான் சங்கம் வழங்கிய பன்முகத்தன்மை வாய்ந்ததும், வழிபாட்டோடும், மக்கள் வாழ்வோடும் இணைந்த தற்கால அருளடையாள இறையியலுக்கு வித்திட்ட இறையியலாளர்கள் யாவர்? அவர்களின் பங்களிப்பை விளக்குக. (30 புள்ளிகள்)

6. குழந்தை திருமுழுக்கினை ஏற்க மறுக்கும் ஒருவருக்கு அது நியாயமானது என்பதை புரியவைக்கும் வண்ணம் நீர் அளிக்கும் பதிலினை ஆதாரத்துடன் விளக்குக. (30 புள்ளிகள்)